**செய்தி வெளியீடு எண்:074** **நாள்: 07.02.2017**

<u>செய்தி வெளியீடு</u>

ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், A.புனவாசல் கிராமத்தைச் சேர்ந்த Naik திரு. திருப்பாண்டி என்பவர் ஜம்மு–காஷ்மீர் பகுதியில் இந்திய நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது, 6.2.2017 அன்று ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்தார்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் Naik திரு. திருப்பாண்டி அவர்களின் குடும்பத்திற்கு தமிழ் நாடு அரசு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், உயிரிழந்த ராணுவ வீரர் திரு. திருப்பாண்டி அவர்களின் குடும்பத்திற்கு உடனடியாக இருபது லட்சம் ரூபாய் வழங்கிடவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**